விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல்
சுத்தமான தேன்

ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3005)
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 151 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 05 திங்கட்கிழமை (19.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## - கொன்றொழிக்கப்பட்ட தமிழ் மக்களின் -
# செந்நீரில் தோய்ந்த முள்ளிவாய்க்கால்
# உறவுகளின் கண்ணீரில் மூழ்கியது

- இன, மத பேதங்களைக் கடந்து உணர்வெழுச்சியுடன் அஞ்சலி
- அஞ்சலிக்கு வருணனும் வழிவிட்டான்

(முள்ளிவாய்க்கால்)

அப்பாவித் தமிழ் மக்கள் இனவெறி கொண்ட சிங்கள இராணுவத்தால் கொத்துக் கொத்தாக சிறுவர், குழந்தைகள், முதியோர் என்ற பாரபட்சமின்றிப் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இன, மத பேதங்களைக் கடந்து உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)




### வெள்ளவத்தையில் இடம்பெற்ற
## நினைவேந்தலைக் குழப்ப சிலர் கடும் பிரயத்தனம்



15ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் ஒரு புண்ணிய பூமி
### சிங்கள இளைஞன் பரவசம்




(முள்ளிவாய்க்கால்)

முள்ளிவாய்க்கால் ஒரு புண்ணிய பூமி. தெற்கில் உள்ள சிங்கள மக்கள் வடக்கிற்கு செல்ல மே 18 ஆம் திகதியே 15ஆம் பக்கம் பார்க்க

## கடைகள் முழு அடைப்பு

(முள்ளிவாய்க்கால்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான நேற்று முள்ளிவாய்க்காலுக்கு செல்லும் பாதையில் கிளி-முல்லை மாவட்ட வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகரம் மற்றும் 15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் இனப் படுகொலையில் இழந்த உயிர்களை நினைவுகூருகின்றோம்
### கனேடியப் பிரதமர் உருக்கம்

(ஒட்டாவா)

தமிழினப் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கும் நீதியை நிலைநாட்ட எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளுக்கும் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கும் என கனேடியப் பிரதமர் மார்க் கார் னி 15ஆம் பக்கம் பார்க்க



## தேசமெங்கும் நெக்குருக வைத்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் பிரதான நிகழ்வு நேற்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 16ஆம் பக்கம் பார்க்க



## மின் கட்டணத்தை அதிகரித்தால் நீதிமன்றை நாட வேண்டிவரும்
### அரசை எச்சரிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு மின்சார சபை முன்வைத்துள்ள நியாயமற்ற கோரிக்கை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு தெளிவுபடுத்துவோம். அது மாத்திரமின்றி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக 02ஆம் பக்கம் பார்க்க

## யுத்த வெற்றியில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

யுத்த வெற்றியின் 16வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இன்று நடைபெறும் "தேசிய வெற்றி கொண்டாட்டத்தில்" ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற் 15ஆம் பக்கம் பார்க்க

## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை ஆய்வு செய்ய நால்வர் அடங்கிய குழு
### நியமித்தார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்வதற்கு சட்டமா அதிபரினால் நான்கு பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை, கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி 02ஆம் பக்கம் பார்க்க




# வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்

## பரிபாலனசபை

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் 09.06.2025

**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவமானது எதிர்வரும் 09.06.2025 அன்று நடைபெற உள்ளது. பின்வரும் விடயங்கள் அறிவிக்கப்படுகிறது.**

1. உணவக, குளிர்பான, சிற்றுண்டி, இனிப்புக்கடைகள் உரிமையாளர்கள் சுகாதார உரிமம் பெற்றிருப்பதோடு அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக செயற்பட வேண்டும். இது தொடர்பான அறிவித்தல் கூட்டம் பின்னர் அறியத்தரப்படும்.
2. சுகாதாரப் பகுதியினரதும் நிர்வாகத்தினரதும் அனுமதி பெற்றவர்கள் மட்டும் கடைகளை நடாத்த அனுமதிக்கப்படுவர்.
3. வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்குதல் 05.06.2025 தொடக்கம் 08.06.2025 வரை தினமும் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 05.00 மணி வரை வழங்கப்படும்.
4. பொருட்கள் ஏற்றி வரும் வாகனங்கள் பொருட்களை இறக்கிய பின் ஆலய வளாகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.
5. ஆலய வளாகத்தில் மதுபாவனை, புகைத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. கடை உரிமையாளர்களாக இருப்பின் அவர்களது உரிமம் இரத்துச் செய்யப்பட்டு ஆலய வளாகத்திலிருந்து உடன் வெளியேற்றப்படுவார்கள்.

**அன்னதானத்துக்காக பணம் செலுத்தும் அடியார்கள் ஆலய கருமபீடத்தில் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று செல்லவும். ஆலய பரிபாலனசபையை தவிர தனிநபருக்கோ, நிறுவனத்துக்கோ பணம் வசூலிப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அனைத்து அடியார்களுக்கும் அறியத் தருகின்றோம்.**

### மின் விநியோகம் கூறுவிலை கோரல்

09.06.2025 அன்று நடைபெறும் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு தனியார் மின்பிறப்பாக்கி உரிமையாளர்களிடம் இருந்து பின்வரும் விடயங்களுக்கான விலை மனுக்கள் கோரப்படுகிறது.

1. டியூப் லைட் 1300
2. சோடியம் குமுழ் 150

மின்பிறப்பாக்கிகளின் விபரத்துடன் 24.05.2025 காலை 10.00 மணிக்கு திறந்த விலைமனுக்கோரல் இடம் பெற உள்ளது. உரியவர்கள் விலைமனு விண்ணப்பத்துடன் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர் : 077 375 7448**
**செயலாளர் : 077 936 2643**
**பொருளாளர் : 076 182 8750**

கமலகாந்தன்
செயலாளர்
வற்றாப்பளை கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலன சபை,
வற்றாப்பளை, முள்ளியவளை.

(C-3004)

## மின் கட்டணத்தை...

குரல் கொடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மின் கட்டணத்தை 18.3 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அரசாங்கத்தால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னர் 30 சதவீதத்தால் மின்கட்டணம் குறைக்கப்படும் எனக் கூறிய தேசிய மக்கள் சக்தி தான், இன்று கட்டண அதிகரிப்பிற்கான யோசனையை முன்வைத்துள்ளது.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகள் அதிகரித்துள்ளமையினாலேயே மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதாகக் கூறினர். அவ்வாறெனில் தற்போது மீண்டும் ஊழல் அதிகரித்துள்ளதா?

தமது பலவீனமான செயற்பாடுகளுக்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் மீது பழி சுமத்தக் கூடாது. அரசாங்கத்தின் பொய்கள் தற்போது பகிரங்கமாக வெளிவர ஆரம்பித்துள்ளன.

தேசிய மக்கள் சக்தி பொய் என்பதை அறியாமல் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தனர். தற்போது சகல தேர்தல்களும் நிறைவடைந்துள்ளதால் ஜே.வி.பி. அதன் உண்மையான முகத்தைக் காண்பிக்க ஆரம்பித்துள்ளது என்றார். (ந-4,7)

## உரும்பிராயில் முதியவரின் சடலம்

உரும்பிராய் வடக்கில் ஆட்களற்ற வீட்டிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று (18) மீட்கப்பட்டுள்ளது.

குறித்த முதியவர் குளமங்கால் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த செபஸ்ரி சிங்கராஜர் செபமாலை முத்து (வயது -72) என்பவருடையது என இனங் காணப்பட்டுள்ளது.

இவர் உரும்பிராய் வடக்கில் உள்ள வீடொன்றைத் தனித்துப் பராமரித்து வந்துள்ளார்.

உறவினர்களால் தொடர்புகொள்ள முடியாத நிலையில் குறித்த வீட்டிற்குச் சென்றபோது முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரண விசாரணைகளை யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் மேற்கொண்டார். (ந-4,7)

## பட்டலந்த...

சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த அறிக்கை மீதான இரண்டு நாள் விவாதம் அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையிலேயே, பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-4,7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...



பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு - கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

# நீதிக்காக தொடர்ந்து போராடுவோம்!

## முள்ளிவாய்க்கால் நினைவுச் செய்தியில் பிரிட்டன் எம்.பி

(லண்டன்)

**முள்ளிவாய்க்காலில் துன்புற்ற அனைவருக்குமாக நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக, அமைதிக்காக, பொறுப்புக்கூறலிற்காக போராடுவோம் என பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் தெரிவித்துள்ளார்**



முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவுச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்னமும் நீதி நிலை நாட்டப்படவில்லை. குடும்பங்கள் இன்னமும் நீதியைக் கோரி நிற்கின்றன, உயிர்பிழைத்தவர்கள் இழப்பின் பெரும் வலியை இன்னமும் சுமக்கின்றனர் இவற்றையெல்லாம் எங்களின் உலகளாவிய புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என குறிப்பிட்டுள்ளார்

முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்டவர்களிற்கான நீதி என்ற விடயம் தமிழர் விவகாரம் இல்லை மனிதாபிமான விவகாரம். நாங்கள் உயிர் பிழைத்தவர்களின் குரல்களிற்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டும், அவர்களின் குரல்கள் மௌனமாக்கப்படாததை உறுதி செய்யவேண்டும்.

இலங்கையில் நிரந்தர அமைதி, சமாதானம், நல்லிணக்கத்திற்காக நாங்கள் தொடர்ந்தும் பாடுபட வேண்டும்.

நீதிக்கான பாதை கடினமானதாக, வலிமிகுந்ததாக காணப்படுகின்ற போதிலும், உலக நாடுகளிலும் பிரிட்டனிலும் காணப்படுகின்ற எங்கள் மக்களின் வலிமை மற்றும் மீள் எழும் தன்மை, நம்பிக்கை நீடிப்பதை வெளிப்படுத்துகின்றது. கடந்து செல்லும் ஒவ்வொரு வருடமும் உண்மைக்கான குரல் மேலும் வலுவடைகின்றது, பொறுப்புக்கூறலிற்கான வேண்டுகோள் மேலும் வலுவடைகின்றது.

பிரிட்டனில் தொழில்கட்சி அரசாங்கம் நீதியை நிலை நாட்டுவதை நோக்கி குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த வருடம் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப் பட்ட முக்கிய தனிநபர்களிற்கு எதிராக பிரிட்டிஸ் அரசாங்கம் தடைகளை விதித்தது.

தடைகள் ஒரு முக்கியமான திருப்புமுனையை குறிக்கின்றன, நீதி என்பது ஒரு தெரிவல்ல அவசியமான விடயம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளது போல, கடந்தகால மனித உரிமை மீறல்களை எதிர்கொள்வது, நிரந்தர அமைதி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமானதாகும். மேலும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படாது என்ற வலுவான செய்தியையும் இது தெரிவித்துள்ளது.

நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக, அமைதிக்காக, பொறுப்புக்கூறலிற்காக போராடுவோம். மீண்டும் அந்த கொடுமைகள் நிகழாமலிருப்பதை உறுதி செய்வோம் என அவர் தெரிவித்தார். (நி)

# உப்பு வருகிறது...! விலை குறைகிறது...!

(கொழும்பு)

உப்பு பற்றாக்குறையைப் போக்க, நாளைக்குள் 2,800 மெட்ரிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்படவுள்ளது என்றும் அவ்வாறு உப்பு வந்தவுடன் தற்போது 400 ரூபாவுக்கு விற்கப்படும் உப்பின் விலையை 100 ரூபாவுக்கு குறைக்கலாம் என்றும் வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2,800 மெட்ரிக் தொன் உப்பு திங்கட்கிழமைக்குள் இலங்கைக்கு வந்துசேருவதுடன்விலைகுறைப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

உப்பு வந்தவுடன், தற்போது 400 ரூபாவுக்கு விற்கப்படும் உப்பு 100 ரூபாவுக்கு குறையலாம். இறக்குமதி செய்யப்பட்ட 30,000 மெட்ரிக் தொன் உப்பு வருவதில் ஏற்பட்ட தாமதம் சந்தையில் பற்றாக்குறை மற்றும் கூர்மையான விலை உயர்வுக்கு வழி வகுத்தது என்றும் வர்த்தகம், வணிகம் மற்று உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆர்.எம். ஜெயவர்த்தன தெரிவித்தார். (நி-8)

# ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் பிரதேச மட்டத்தில் விஸ்தரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளைப் பிரதேச செயலகங்கள் ஊடாக நாடு தழுவிய ரீதியில் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இனி வரும் காலங்களில் ஜனாதிபதி நிதியத்தின் கொடுப்பனவுகளை எதிர்பார்க்கும் நோயாளிகள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அதற்கான அதிகாரிகளைச் சந்தித்து தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தாலே போதுமானது. அவ்வாறான விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக தரவேற்றுவது, அதனை பொறுப்பெடுத்தது தொடக்கம் அனுமதி அல்லது நிராகரிப்பு வரையான அனைத்துச் செயற்பாடுகள் தொடர்பான பங்களிப்புகள், விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை இணையத்தளம் வழியாக பரீட்சித்தல், அனுமதி கிடைத்தவுடன் மருத்துவ உதவித் தொகை வழங்கல் போன்ற செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அலுவலகத்தின் சார்பில் விசேட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. (நி)

# எட்டு மாதங்களுக்குள் தலைகீழாக மாறிய அரசாங்கம்

## உதய கம்மன்பில சாடல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி, தற்போதைய அரசாங்கத்தின் வாக்காளர் தளமான தேசிய மக்கள் சக்தி இயக்கம் எட்டு மாதங்கள் கடப்பதற்கு முன்பே முற்றிலுமாக சரிந்துவிட்டதாக பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கோட்டையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.



அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கம் தனது முதல் நியமனமான ஜனாதிபதியின் செயலாளரை நியமித்த தருணத்திலிருந்தே தவறான பாதையில் செல்லத் தொடங்கியது. அரசாங்கம் அமைக்கப்பட்டு ஒரு வாரம் முடிவதற்கு முன்பே, அரசாங்கத்தின் மூன்றாவது நியமனமான பொதுப் பாதுகாப்புச் செயலாளரின் நியமனம் குறித்து நாங்கள் விமர்சனங்களை எழுப்பினோம். தவறான நடவடிக்கை எடுக்கும் ஒவ்வொரு முறையும் அதைச் சுட்டிக்காட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டையும் அரசாங்கத்தையும் ஒரே நேரத்தில் ஊழல் செய்ய அனுமதிக்க முடியாது.

அரசாங்கம் பணிவாக இருந்தால், அவர்கள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேற வாய்ப்பு உள்ளது. ஆனால் அரசாங்கம் ஆணவமாக இருந்தால் தவறுகளைப் பாதுகாப்பதன் மூலம் அரசாங்கத்தை அழிக்க முடியும் என தெரிவித்துள்ளார். (நி-8)

# சுகாதார அமைச்சர் சுவிஸ் பயணம்



(கொழும்பு)

உலக சுகாதார அமைப்பின் 78 ஆவது வருடாந்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சுவிட்சர்லாந்துக்குப் புறப்பட்டார்.

இந்த மாநாடு இன்று முதல் 27 ஆம் திகதி வரை சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெறும். உலக சுகாதார அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள். மேலும் அந்த நாடுகளைச் சேர்ந்த சுகாதாரத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

# 'எரிமலை மூச்சாக' சுதர்சன் 'எழும் புயல் வீச்சாக' சுப்மன்

## டில்லியை ஓட ஓட விரட்டி பிளே ஓப்புக்கு ஜோராக நுழைந்தது குஜராத்

சாய் சுதர்சன் சதம் கடந்து கைகொடுக்க, 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சுப்பர் வெற்றி பெற்ற குஜராத் அணி "பிளே-ஓப்" சுற்றுக்குள் நுழைந்தது.

டில்லி, அருண் ஜெட்லி மைதானத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் டில்லி - குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

**ராகுல் சதம்:**

டில்லி அணிக்கு டுபிளசி (5) ஏமாற்றினார். ரபாடா வீசிய 6வது ஓவரில் 2 சிக்சர்கள்,ஒரு பவுண்டரி விளாசிய லோகேஷ் ராகுல், ரஷித் கான் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி 35 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். அபிஷேக் போரெல் (30), அணித் தலைவர் அக்சர் படேல் (25) ஓரளவு கைகொடுத்தனர். பிரசித் கிருஷ்ணா வீசிய 19வது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண் டரி அடித்த ராகுல், பிரிமியர் லீக் அரங்கில் தனது 5வது சதத்தைப் பதிவு செய்தார்.



20 ஓவர்கள் நிறைவில் டில்லி அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களை எடுத்தது.

ராகுல் (112 ரன், 4 சிக்சர், 14 பவுண்டரி), ஸ்டப்ஸ் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சுப்பர் சுப்மன்:**

சவாலான இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு சாய் சுதர்சன், அணித் தலைவர் சுப்மன் கில் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. நடராஜன் வீசிய 2வது ஓவரில் ஒரு சிக்சர், 3 பவுண்டரிகள் விளாசிய சுதர்சன், அக்சர் படேல் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி 30 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். துஷ்மந்த சமீர பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சுப்மன் கில், தன்பங்கிற்கு அரைச்சதம் விளாசினார். இவர்களை பிரிக்க முடியாமல் டில்லி அணி பந்துவீச்சாளர்கள் திணறினர்.

**சுதர்சன் அபாரம்:**

குல்தீப் யாதவ் பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட சுதர்சன், பிரீமியர் லீக் அரங்கில் தனது 2ஆவது சதத்தைப் பதிவு செய்தார். தொடர்ந்து அசத்திய சுதர்சன், விப்ராஜ் நிகம் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

குஜராத் அணி 19 ஓவர்களில், விக்கெட் இழப்பின்றி 205 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சுதர்சன் (108* ஓட்., 4 சிக்சர், 12 பவுண்டரி), சுப்மன் (93* ஓட்., 7 சிக்சர், 3 பவுண்டரி) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ந-4,7)

**மூன்று அணிகள் தகுதி**

ஒன்பதாவது வெற்றியை பதிவு செய்த குஜராத் அணி 18 புள்ளிகளுடன் 3வது முறையாக "பிளே-ஓப்" சுற்றுக்கு முன்னேறியது. குஜராத் அணி வென்றதால், பெங்களூரு, பஞ்சாப் அணிகளும் "பிளே-ஓப்" சுற்றுக்கு தகுதி பெற்றன. தற்போது மீதமுள்ள ஒரு இடத்துக்கு மும்பை, டில்லி அணிகளுக்கு இடையே போட்டி நிலவுகிறது.

**சிறந்த வெற்றி**

குஜராத் அணி முதன்முறையாக 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பிரிமியர் லீக் அரங்கில், இதுவரை 16 போட்டிகளில், 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பதிவாகின. பெங்களூரு அணி அதிகபட்சமாக 4 முறை இப்படி வென்றது.

# ஷஷாங்க், வதேரா அசத்தல் ஆட்டம்

## முறிந்த அம்பாய் டில்லி வெற்றித் தெம்பாய் பஞ்சாப்

## பிளே ஓப்பிற்குள் காலடி வைத்தது



இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற பஞ்சாப் அணி "பிளே-ஓப்" வாய்ப்பை நெருங்கியது.

ஜெய்ப்பூரில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் பஞ்சாப், ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியல் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் ஷ்ரேயஸ், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**வதேரா விளாசல்:**

பஞ்சாப் அணி ஆரம்பத்தில் திணறியது. பிரியன்ஷ் (9), மிட்சல் ஓவன் (0), பிரப்சிம்ரன் (21) விரைவில் ஆட்டமிழக்க, 3.1 ஓவர்களில் 34/3 ஓட்டங்கள் எடுத்து தவித்தது. நான்காவது விக்கெட்டுக்கு ஷ்ரேயஸ்- நேஹல் வதேரா, 44 பந்துகளில் 67 ஓட்டங்கள் சேர்த்தனர். ஷ்ரேயஸ், 30 ஓட்டங்கள் எடுத்தார். மத்வால் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய வதேரா, 25 பந்தில் அரைசதம் எட்டினார். வதேரா, 70 ரன்னுக்கு (5ஓ4, 5ஓ6) வெளியேறினார். கடைசி கட்டத்தில் கலக்கிய சஷாங் சிங், 27 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். ஓமர்சாய் 9 பந்துகளில் 21 ஓட்டங்கள் விளாசினார். கடைசி 4 ஓவரில் 60 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் அணி 219/5 ஓட்டங்கள் குவித்தது. சஷாங் சிங் (59, 5X4, 3X6), ஓமர்சாய் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**கலக்கல் ஆரம்பம்:**

கடின இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு ஜெய்ஸ்வால், இளம் வைபவ் சூர்யவன்ஷி அதிரடி ஆரம்பம் கொடுத்தனர். அர்ஷ்தீப் வீசிய முதல் ஓவரில் ஜெய்ஸ்வால் 22 ஓட்டங்கள் (4, 4, 4, 6, 4) விளாசினார். யான்சென் வீசிய அடுத்த ஓவரில் வைவவ் மிரட்ட, 17 ஓட்டங்கள் (6, 4, 6) கிடைத்தது. 4.4 ஓவரில் ராஜஸ்தான் 76/0 ஓட்டங்கள் எடுத்தது.

**ஹர்பிரீத் திருப்பம்:**

விரலில் காயம் அடைந்த ஷ்ரேயசிற்கு மாற்று வீரராக வந்த "ஸ்பின்னர்" ஹர்பிரீத் பிரார் திருப்பம் ஏற்படுத்தினார். இவரது வலையில் வைபவ் (40, 4ஓ4, 4X6) சிக்கினார். 24 பந்தில் அரைச்சதம் எட்டிய ஜெய்ஸ்வால் (50, 9X4, 1X6), பிரார் பந்தில் ஆட்டமிழக்க, சிக்கல் ஆரம்பமானது. அணித் தலைவர் சாம்சன் (20), ரியான் பராக் (13), ஹெட்மெயர் (11) நிலைக்கவில்லை. போராடிய துருவ் ஜூரல் அரைச்சதம் கடந்தார்.

**யான்சென் அபாரம்:** கடைசி ஓவரில் ராஜஸ்தான் வெற்றிக்கு 22 ஓட்டங்கள் தேவைப்பட்டன. யான்சென் பந்துவீசினார். முதல் இரு பந்துகளில் 2 ஓட்டங்கள் கொடுத்தார். 3, 4வது பந்தில் துருவ் (53), ஹசரங்க (0) ஆட்டமிழந்தார். அடுத்த பந்தை "வைடாக" வீச "ஹட்ரிக்" வாய்ப்பு நழுவியது. கடைசி இரு பந்துகளில் மபாகா 2 பவுண்டரி அடித்து ஆறுதல் கொடுத்தார். யான்சென் 11 ஓட்டங்கள் மட்டும் விட்டுக் கொடுத்து வெற்றியை உறுதி செய்தார். ஏற்கனவே "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்த ராஜஸ்தான் அணி, 20 ஓவரில் 7வி க்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது.

ஆட்டநாயகன் விருதை ஹர்பிரீத் பிரார் (3/22) வென்றார். (ந-4,7)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சித்தி விநாயகர் நூல் நிலையமும் சிவ. சண்முக வடிவேல் அறநிதி யமும் இணைந்து நடத்தும் அமரர் கலாபூசணம் சிவ. சண் முகவடி வேலின் "புறு நானூற்றுத் தமிழமுதம்" வெளியீட்டு விழா சித்தி விநாயகர் நூல் நிலையத் தலைவர் மு. வைத்திலிங்கம் தலைமையில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஏழாலை மேற்கு சரோஜினி பூங்காவில் இந் நூல் வெளியீட்டு விழா இடம்பெற வுள்ளது. (நி-3-8)


தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை

## நோயாளர் நலன்புரிச் சங்கம்

பொதுக் கூட்டம்

இடம் :- தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கேட்போர் கூடம்

காலம்:-01.06.2025 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- காலை 10 மணி

உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத் தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் புதிய அங்கத்தவர்களும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

(C-2999) செயலாளர்


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆவரங்கால் மேற்கை பிறப்பிடமாகவும்
கணேஸ்வரம் அளவெட்டியை
வதிவிடமாகவும் கொண்ட

### அமரர். மயிலு வதனன்

திதி:19:05:2025



பிறப்பு 21.09.1970 இறப்பு 29.05.2024

உங்கள் மதிமுகமும் மகிழ்வான பேச்சும்
அழகான புன்சிரிப்பும் மறைந்து ஒரு வருடம்
ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதில் இருக்கும்.
எண்ணிப்பார்க்க இதயங்கள் கனக்கின்றது.
எமக்கு ஆறுதலாக இருந்த
உங்கள் நினைவுகள் ஒருபோதும்
எம்மைவிட்டுப் பிரியாது...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(சி-3000)

கணேஸ்வரம்,அளவெட்டி. தகவல்-குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு -- 1963 -- 03 -- 27



இறப்பு -- 2025 -- 05 -- 16

### செல்வி. இராஜேஸ்வரி (செல்வம்) தம்பிப்பிள்ளை

துன்னாலை மேற்கு, கரவெட்டி, ஞானாசாரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி.இராஜேஸ்வரி தம்பிப்பிள்ளை அவர்கள் கடந்த 16.05.2025 வெள்ளிக்கிழமையன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை(அதிபர்)- செல்லம்மா தம்பதியினரின் அன்பு இளைய மகளும், கதிரவேற்பிள்ளை (ஓய்வு பெற்ற கால்நடை வைத்தியர் - கொழும்பு), திருமதி. மகேஸ்வரி மகேந்திரா(இளைப்பாறிய உப அதிபர்- நெல்லியடி மத்திய கல்லூரி), தங்கவேல் (இளைப்பாறிய பொறியிலாளர்- அவுஸ்திரேலியா), ஞானவேல்(கணனி ஒழுங்கமைப் பாளர்- லண்டன்), திருமதி. தனேஸ்வரி அருள்ஞானசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியர்- அவுஸ்திரேலியா), திருமதி. சிவனேஸ்வரி முத்துகுமாரசாமி (விரிவுரையாளர்- அமெரிக்கா) ஆகியோரின் அன்புமிகு இளைய சகோதரியும் காலஞ்சென்ற சின்னச்சாமிதேவர் (இளைப்பாறிய ஆசிரியர்), சிவகாமிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை), தம்பதியினரின் பெறாமகளும், காலஞ் சென்ற வல்லிபுரம் சூரிப்பிள்ளை (வணிகர்)- சின்னம்மா தம்பதியினரின் பெறாமகளும் ஆவார்.

இராசமலர்(மல்லிகா)கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மகேந்திரா(சட்டத்தரணி), ஞானவேல் கலாநிதி (இளைப்பாறிய ஆசிரியை), அருள்ஞானசுந்தரம்(கணனி அளவைப் பொறியியலளார்), பகீரதி தங்கவேல்(மருத்துவர்- அவுஸ்திரேலியா), தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி (சட்டத்தரணி- அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி.கௌரி மகேசன், திருமதி.பவானிஅருட்சோதி, திருமதி. ரஞ்சனி அருள்நந்தி (மருத்துவர்- லண்டன்), திருமதி. சாந்தினி மங்களேஸ்வரன்(ஆசிரியை) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 19.05.2025 திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

14, ஞானாசாரியார் வீதி, துன்னாலை, மேற்கு, கரவெட்டி. தகவல்- குடும்பத்தினர் 077 766 7136, 021 226 2067

# இராசிபலன்

19.05.2025, வைகாசி05, திங்கட்கிழமை
சப்தமி பின்னிரவு - 2.07 மணிவரை

திருவோணம் பிற்பகல் 4.15 மணி வரை
சுபநேரம் 11.52-1.22 ணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்- புநரபூசம், பூசம்

வளவன்

**மேஷம்** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**ரிஷபம்** வருமானம் பெருக வழி அமைத்துக் கொள்வீர்கள், சுப காரிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** உடல் நலனில் கவனம் தேவை, நட்பு பகையாகாமல் இருக்கக் கவனம் தேவை, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**கடகம்** எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எண்ணியது நிறைவேறும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**சிம்மம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், மறைமுகப் போட்டிகள் மாறும், நன்மைகள் நாடி வரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு,

**கன்னி** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொது நலனில் அக்கறை கூடும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அன்பு நண்பர்களின் சந்திப்புண்டு,

**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மன அமைதி கூட மகத்தான வழி பாடுகளைச் செய்ய வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மீனம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**உன் கடமையைச் செய் உனக்கு வேண்டியது தவறாது கிடைக்கும்.**

# இனவாதம் பேசும் அரசியல்வாதிகளுக்கு காலம் சிறந்த பதில் சொல்லும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

(கொழும்பு)

**"அற்ப அரசியலுக்காக இனவாதம் பேசி தேசிய மக்கள் சக்தியையும், தமிழ் பேசும் மக்களையும் பிரிக்க முற்படும் அரசியல் வியாபாரிகளுக்குக் காலம் சிறந்த பாடத்தைக் கற்பிக்கும்" என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**



அத்துடன், எப்படியான அரசியல் சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டாலும் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்தியை கைவிட்டு செல்வதற்கு தமிழ் பேசும் மக்கள் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தார்

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக அரசியல் களத்தில் எதிரணிகள் ஒப்பாரி வைக்கின்றன. உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவை, பொதுத்தேர்தல் முடிவுடன் முடிச்சுப் போடுகின்றன. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் ஒப்பிட்டு பார்த்தால் நிலைமை புரியும். அதே போல தேசிய மக்கள் சக்தி 266 சபைகளைக் கைப்பற்றியுள்ளது. வடக்கிலும் 150 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். எனவே, பின்னடைவு, வீழ்ச்சி எனக் கூறப்படுவதெல்லாம் அப்பட்டமான பொய். மக்கள் ஆதரவு எமக்கு என்றும் உள்ளது. ஏனெனில் நாம் மக்கள் அரசியலை முன்னெடுப்பவர்கள்.

உண்மையான நல்லிணக்கம்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முழு வீச்சுடன் செயற்படுகின்றது. அதற்கு மக்களும் துணை நிற்கின்றனர். எனினும், இனவாதம் பேசி, மக்களைப் பிரித்தாளும் அரசியலைச் சிலர் முன்னெடுக்க முற்படுகின்றனர். அப்படியானவர்களுக்குக் காலம் நிச்சயம் பதில் சொல்லும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## உலக தேனீ தினம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தினால் காலநிலைக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் அனுசரனையுடன் உலக தேனீ தின நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள வள்ளிபுனம் பிரதேச பொது நோக்கு மண்டபத்தில் காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது தேனீ வளர்ப்பு சம்பந்தமான கருத்தரங்கும் தேனீ வளர்ப்புக்கான தேனீப் பெட்டிகளும் வழங்கப் படுமெனவும் அதனைத் தொடர்ந்து தேனீ வளர்ப்பு பிரதேசத்திற்கான கள விஜயமும் இடம்பெற வுள்ளது என புதுக்குடியிருப்பு மந்துவில் பிரிவின் விவசாய போதனாசிரியர் பு. பிரசார்தன் தெரிவித்துள்ளார். (நி-3-8)

# மோட்டார் சைக்கிள்களை திருடியவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் 5 மோட்டார் சைக்கிள்களைத் திருடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இம் மாதம் வவுனியா, ஈரப்பெரிய குளம், மதவாச்சி, வவுனியா - முதலாம் குறுக்குத் தெரு, மதவாச்சி - அட்டவீரக் கொட, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 27 வயதுடையவர் எனவும்அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த 5 மோட்டார் சைக்கிள்களும் விற்பனை செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து குறித்த 5 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (8-250)

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முள்ளிவாய்க்காலில்ஊர்திப்பவனி



(கிளிநொச்சி)

யுத்தம் முடிந்து 16 வருடங்கள் ஆகின்ற நிலையில் அரசியல் கைதிகளை முழுமையாக விடுவிக்குமாறும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தை நோக்கி ஊர்தி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகராசா ஜீவராசாவால் இவ் ஊர்தி முன்னெடுக்கப்பட்டது.இந்த ஊர்தி தருமபுரம் பகுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# டிப்பர் சாரதிகள் மூவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 3 டிப்பர் சாரதிகள் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் கல்மடு நகரில் மணல் அகழ்வுக்காக அனுமதிக்கப்பட்ட பத்திரத்தை பயன்படுத்தி அனுமதிக்கப்படாத கல்லாறுப் பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டு, டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்மை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் மூன்று டிப்பர் சாரதிகள் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.(8-316)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 210 |
| பச்சைமிளகாய் | 220 | 220 | 220 |
| தக்காளி | 850 | 1000 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 |
| கோவா | 550 | 550 | 350 |
| கரட் | 950 | 1000 | 900 |
| பூசணி | 180 | 170 | 180 |
| புடோல் | 300 | 200 | 220 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 300 | 120-300 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 100 |
| பாகற்காய் | 700 | 800 | 800 |
| வெண்டக்காய் | 180 | 200 | 150 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 250 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 |
| பீற்றூட் | 500 | 500 | 400 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 1000 | 800-1000 |
| போஞ்சி | 700 | 800 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | --- |
| கீரை - 1 பிடி | 80-150 | 200 | 100 |
| தேசிக்காய் | 450 | 250 | 420 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 150 | 200-300 |
| இராசவள்ளி | 650 | 500 | -- |
| வெங்காயப்பூ | 850 | 600 | 700 |
| முள்ளங்கி | 180 | 200 | 140 |
| பொன்னாங்காணி | 70 | 150 | 100 |
| வல்லாரை | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | 100 |

# இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் கட்டாரில் மீண்டும் பேச்சுவார்த்தை

(கட்டார்)

**காசா போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே கட்டாரில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



இஸ்ரேலியப் படைகள் காசாவில் குண்டுவீச்சைத் தீவிரப்படுத்தி, பாரிய தரைவழித் தாக்குதலுக்கு தயாராகி வரும் பரபரப்பான சூழ்நிலையில், இஸ்ரேலுக்கும் ஹமாஸ்"க்கும் இடையிலான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் கட்டாரில் மீண்டும் தொடங்கியுள்ளன.

முன்னதாக, காசா பகுதியில் தனது இராணுவ நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆயத்தங்களை இஸ்ரேல் மேற்கொண்டு வருவதாக அறிவித்தது.

அத்தோடு இஸ்ரேலிய இராணுவம், விரிவான வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், பெருமளவிலான துருப்புக்களை அப்பகுதிக்கு அனுப்பி வருவதாகவும் தெரிவித்திருந்தது.

போர் நிறுத்தம் ஏற்படாத வரையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட ஹமாஸ் தொடக்கத்தில் மறுப்புத் தெரிவித்ததாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் குறிப்பிட்டார்.

இருப்பினும், இஸ்ரேலின் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்கள் மற்றும் படைகளின் அணிதிரட்டல் காரணமாக ஹமாஸ் அமைப்பின் பிரதிநிதிகள் தற்போது ஒரு மேசையில் அமர்ந்து இந்த விவகாரம் குறித்து தீவிரமாக விவாதிக்க சம்மதம் தெரிவித்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இல்லாவிட்டால், இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் என்றும் இஸ்ரேல் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை போர் நிறுத்தத்திற்கான முதல் கட்டப் பேச்சுவார்த் தைகள் தொடங்கியதாக ஹமாஸ் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## அமெரிக்காவின் கெண்டகியில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 18 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கெண்டகி மாகாணத்தில் கனமழை பெய்து வருகிறது.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட குடியிருப்புப் பகுதிகள் மற்றும் சாலைகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. மின்தடையால் பல்லாயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கின.

ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகள் மூலம் மக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தின் அளவு அதிகரித்து வருவதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அம்மாகாண முதல்வர் தெரிவித்துள்ளார். (நி-8)

## மீண்டும் தலை தூக்கும் கொரோனா சர்வதேச ஊடகங்கள் தகவல்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங்கில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், ஹொங்கொங்கின் முக்கிய பகுதிகளில் கொரோனாப் பாதிப்பு புதிய அலையாக உருவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. அத்தோடு, சிங்கப்பூரில் ஒரே வாரத்தில் 28 சதவீதம் கொரோனா தொற்றுகள் அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

மே மூன்றாம் திகதியுடன் முடிந்த வாரத்தில், 14, 200 பேருக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகச் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதேபோல தாய்லாந்திலும் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவில் இருந்து கடந்த 2019 ஆம் ஆண்டு பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் உலகம் முழுக்க பரவி பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

இதனால் பல லட்சம் மக்கள் உயிரிழந்ததுடன் இதற்குத் தடுப்பூசிகள் கண்டறியப்பட்டு மக்களுக்கு செலுத்தப்பட்ட நிலையில் உலகம் பழைய நிலைக்குத் திரும்பியது. இந்தநிலையில் தற்போது மீண்டும் இவ்வாறு கொரோனா வைரஸ் பரவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை உலக மக்களிடையே பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ரஷ்யா- உக்ரைன் விரைவில் போர் நிறுத்தம்

### நம்பிக்கை வெளியிட்டார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

ரஷ்யா-உக்ரைன் இடையே கடந்த 3 ஆண்டுகளாகப் போர் நீடித்து வருகிறது. உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி புடின் சம்மதம் தெரிவித்தார்.

இரு நாட்டுப் பிரதிநிதிகளும் நேரடி அமைதிப் பேச்சுவார்த்தைக்காக துருக்கி தலைநகர் இஸ்தான் புல்லில் கூடினர். துருக்கி நாட்டின் அதிகாரிகள் நடுநிலை வகித்தனர்.

இந்தச் சந்திப்பு சுமார் 2 மணி நேரம் நடந்தது. இந்நிலையில், ரஷ்யா-உக்ரைன் போர் நிறுத்தம் குறித்து இன்று ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் பேசுவேன் என ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

திங்கட்கிழமை ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் தொலைபேசி மூலம் பேசுவேன். அப்போது வாரத்திற்கு சராசரியாக 5000 இற்கும் மேற்பட்ட ரஷ்ய மற்றும் உக்ரைன் வீரர்களைக் கொல்லும் போரை நிறுத்துவது குறித்து பேசுவேன்.

அதன்பின் நான் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியிடமும் பேசுவேன். இது ஒரு முக்கிய நாளாக இருக்கும் என நம்புகிறேன். ஒரு போர் நிறுத்தம் ஏற்படும். மேலும் இந்த வன்முறை முடிவுக்கு வரும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## புளோரிடா விமான நிலையத்தில் தீப்பரவல் 30 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் புளோரிடா விமான நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க விமான நிலையங்களில் ஒன்றான புளோரிடா ஜாக்சன் வில்லா சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்று எதிர்பாராத விதமாகத் தீப்பிடித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த தீ அங்கிருந்த ஏனைய 50 இற்கும் மேற்பட்ட வாகனங்களிலும் பரவியதுடன் முதல் தளத்தில் பற்றிய தீ, ஏனைய தளங்களிலும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தீ விபத்தை அடுத்து உடனடியாக விமான நிலையம் மூடப்பட்டதுடன் 30 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதே வேளை, பல விமானங்களின் புறப்படும் மற்றும் வருகை நேரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-8)

# வலிசும
























# ...ந்த மே-18





















## உயிர்நீத்த உறவுகளுக்காக நந்திக்கடலில் அஞ்சலி



(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி பிராத்தனையும் மேற்கொள்ளப்பட்டது. (நி-8-299)

## வவுனியாவில் இடம்பெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை



(முல்லைத்தீவு)

இறுதி யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளான நேற்று வடக்கு -கிழக்கில் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

அந்த வகையில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகள் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்று இருந்தது.

அந்தணர் ஒன்றியத்தின் ஆலோசகர் ஜெயந்திநாத குருக்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுமக்கள், அடியார்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஆத்மசாந்தி வேண்டி தீபமேற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (நி-8-250)

## பிரிட்டனில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு





(லண்டன்)

இங்கிலாந்தின் சவுத் என்டில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் 16வருடத்தினை நினைவு கூர்ந்துள்ளனர்.

கடற்கரையோரம் கூடிய மக்கள் 16 வருடங்களிற்கு முன்னர் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் அழிக்கப்பட்ட தங்கள் உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

சூபரி ஈஸ்ட் கடற்கரையோரத்தில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தமிழ் மக்கள் மலர்தூவி அஞ்ச... செலுத்தினர். இதன் பின்ன... நூற்றுக்கணக்கான மிதக்கும் விளக்குகள் கடலில் விட... பட்டன.

நினைவேந்தல் நிகழ்வின் போது முள்ளிவாய்க்கால் கஞ்... யும் பரிமாறப்பட்டது. (நி-8)

# அனர்த்த நிலைமைகள் தொடர்பில் 117 இற்கு அறிவிக்கலாம்

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவிப்பு

**(கொழும்பு)**

**அனர்த்த நிலைமைகள் தொடர்பான விடயங்களை, 24 மணி நேரமும் இயங்கும் 117 என்ற துரித அழைப்பு இலக்கத்துக்கு மும்மொழிகளிலும் அறிவிக்க முடியும் என, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.**

தற்போது எவ்விதமான அனர்த்தங்களும் பதிவாகவில்லை என்றாலும் எதிர் வரும் நாட்களில் மழை நிலைமை அதிகரிக்கும் போது, அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு முகங்கொடுப்பதற்காகச் சகல மாவட்டங்களிலும் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையங்களும் தயார்ப்படுத்தப் பட்டுள்ளன.

அதேநேரம், தென் மேற்கு பருவப் பெயர்ச்சி மழை நிலைமை படிப்படியாக நாடு முழுவதும் நிலைபெற்று வரும் நிலையில், எதிர்வரும் நாட்களில் மழை வீழ்ச்சி அதிகரிக்கக் கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (நி-8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ் வரி அம்பாள் ஆலய மஹோற்சவம் எதிர் வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் திரு விழாக்கள்இடம் பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி செய்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த் தத்திருவிழாவும் அன்று மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்கா வனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1988- இந்து<br>நட்சத் திரம்: புனர்பூசம்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: O/L,நகைவேலை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15475 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:24<br>உயரம் : 5'1"<br>தகைமை/தொழில்:.NCT(Civil Engineering),DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10704 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>3இல்சூரி செவ்<br>உயரம் :5'19"<br>தகைமை/தொழில்-BSc,Canada<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15476 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BA, DO(gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:. G/11011 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்:BE,கணணி பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15477 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: - 60<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/13037 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி-பா: 0 8இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: IBSL, Executive (bank)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15479 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:17<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>உயரம்:5'3"<br>தகைமை்/தொழில்: O/L,Business (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15481 | பிறப்பு-1991 -இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா- 23<br>சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:. BBA, MBA Management Assistant.<br>எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை(Gov/Pvt)<br>தொ.இ: G/14352 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# டெங்கு, சிக்குன்குனியா பரவும் அபாயம்

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து



(கொழும்பு)

தற்போது நாட்டில் பெய்து வரும் மழையால் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

டெங்குவைப் பரப்பும் அதே நுளம்புகள் மூலமே சிக்குன்குனியா பரவுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டில் இலங்கையில் 17 816 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.

கடந்த மாதத்தில் மட்டும் நாட்டில் 5175 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏப்ரல் மாதத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவான மாதமாக இது பதிவாகியுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி சிக்குன்குனியாவின் அறிகுறிகளாக திடீர் காய்ச்சல் , தசைவலி ,தலைவலி , வாந்தி, சோர்வு , சொறி போன்றன காணப்படும் எனத் தெரிவிக்கின்றனர். (நி-3)

# கல்லடி பாலத்து வாவியில் மிதந்து வந்த நினைவுத் தூபி



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்லடி பாலத்து வாவியில் தமிழின அழிப்பு வாரத்தை நினைவு கூர்ந்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் தூபியினைக் கொண்ட புகைப்படங்கள் மற்றும் கறுப்பு, சிவப்பு, மஞ்சள் கொடிகளுடன் மிதக்கும் வகையில் அமைக்கப்பட்ட இரண்டு தூபிகளால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த மிதக்கும் தூபி நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் மிதந்து வந்ததையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது .

மின் விளக்குகள் ஒளிர்ந்த நிலையில் இரு மிதக்கும் வகையிலான தமிழின அழிப்பின் நினைவாக தயாரிக்கப்பட்ட தூபிகள் மிதந்து முகத்துவாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிப்பு

(வவுனியா)

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கான 16 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் கண்ணீர் மல்க நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் 3011 ஆவது நாளாகப் போராட்டம் மேற்கொண்டு வரும் வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்த உறவுகளுக்காக கண்ணீர் மல்கி கதறியழுத உறவுகள் அக வணக்கம் செலுத்தி, ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்கள்,

இந்த நாள் மிகவும் வேதனையானது, போரின் கொடூரமான முடிவை நினைவூட்டுகிறது, அங்கு ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் பொது மக்கள் படு கொலை செய்யப்பட்டனர். அந்தப் போர் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவாக மட்டுமல்ல, தமிழர் துன்பங்களுக்கு உலகளாவிய அலட்சியத்தின் விளைவாகவும் இருந்தது.

முழு உலகமும் நம்மைப் புறக்கணித்தது, முள்ளி வாய்க்காலை தமிழர் நம்பிக்கைகளின் கல்லறையாக மாற்ற அனுமதித்தது. முள்ளிவாய்க்கால் நாளில், உலகிற்கு நினைவூட்டுகிறோம்,




எங்கள் வலி தொடர்கிறது, எங்கள் போராட்டம் தொடர்கிறது, நீதி மற்றும் சுதந்திரத்திற்கான எங்கள் கோரிக்கை ஒருபோதும் அமைதியாகாது எனத் தெரிவித்தனர். (8-250)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## பழைய சோறு (Fermented Rice)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அருமருந்தாகும் பழைய சோறு. மரபணு மாற்றப்படாத அரிசி வகையே உகந்தது. முதல் நாள் சமைத்த சோற்றில் 12 மணிநேரம் நீர் ஊற்றி வைத்து சாப்பிட வேண்டும். சாதத்தை பழைய சோறாக மாற்றும் போது இரும்புச் சத்து , கல்சியம், பொட்டாசியம் போன்ற சத்துக்கள் அதிகளவில் கிடைக்கின்றன.

அதாவது போசணைக் கூறுகள், தாதுச்சத்துக்கள் எல்லாம் அதிகமாகின்றது. வெயிலிற்கு உகந்த உணவாகும். உடலையும் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றது. சாதம் சாப்பிடுகின்ற அளவுதான் பழைய சோறும் சாப்பிட வேண்டும். ஒரு கப் சாதத்தில் 130 கலோரிகள் கிடைக்கும். ஆனால் சத்துக்கள் அதிகமாகக் கிடைக்கும்.

சிலர் பழைய சாதம் சாப்பிட்டால் உடற்பருமன் கூடும். மற்றும் தூக்கம் உண்டாகும் எனக்கூறுவர். அப்படியல்ல ஆனால் பழைய சாதத்தை நீரூற்றிய 15 மணி நேரத்திற்குள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மலச்சிக்கல் ஏற்படாமல் பாதுகாக்கும். இரத்த அழுத்தம் உள்ளவர்கள் கூடப் பயன்படுத்தலாம்.

இரத்த அழுத்தத்தை சீராக்கும் தன்மை ஏற்படும். ஒவ்வாமை, தோல் பிரச்சினை, தோல் அழற்சி உள்ளவர்கள்கூட பழைய சாதத்தை பயன்படுத்தினால் தோல் பிரச்சினைகள் குறையும்.

2017 ஆம் ஆண்டு



American Nutriti on Association மேற்கொண்ட ஆய்வுகளின் படி குடல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சிறந்த உணவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. குடல் வீக்கம் அடையும் நோய்களுக்கு பழைய சோறு சிறந்த மருந்தாகும். பாரம்பரிய உணவுகளுள் பழைய சோறு முக்கியமானதாகும்.

முக்கியமாக பழைய சாதம் பாரம்பரிய அரிசிச் சோறுகளில் இருந்து தயாரிக்கப்பட வேண்டும். பழைய சாதமானது lacto pasilus ஆனது Pro- biotic உணவாக மாறுகிறது. அதாவது நல்ல கிருமிகளைக் கொண்ட குடல் ஆரோக்கியத்திற்கு உகந்த உணவாகிறது பழைய சோறு. எனவே பழைய சாத மானது இயற்கையான புரோ பயற்றிக் உணவாகிறது. இதை விட முக்கிய உயிர்ச் சத்துக்களான உயிர்ச்சத்து K, B complex அதிகமாகக் கிடைக்கிறது. அரிசி வகைகளில் உள்ள Anti Nutrie nts என்று சொல்லப்படுகின்ற சத்துக்களை அகத்துறிஞ்சவிடாமல் தடுக்கும். லெசித்தின் போன்ற சத்துக்கள் பழைய சாதமாக மாறும் போது உடைபடுகிறது. எனவே பழைய சோறு எல்லா முக்கியமான சத்துக்களும் அகத்துறிஞ்சக் கூடிய நிலைக்கு மாறி ஆரோக்கியமான உணவாகிறது. அதாவது இலகுவாக கல்சியம், இரும்புச் சத்து போன்றன அகத்துறிஞ்சப்பட உதவுகிறது. பழைய சாதமே ஒரு புரோ பயற்றிக் உணவு.

எனவே பழைய சாதத்தினை மோரில் சேர்த்துச் சாப்பிடும் போது புரோ பயற்றிக் Compound உணவாக மாற்றி இன்னும் ஆரோக்கியமான, போசணைக் கூறு நிறைந்த உணவாகிறது. எனினும் அளவாக சாப்பிடுவதால் அதிலிருக்கும் காபோவைதரேற்றும் அளவாக உடம்பில் சேருகிறது. பெருங்குடல் பாதிப்படையும் நோய்களுக்கு சிறந்த உணவு பழைய சோறாகும்.

பழைய சோற்றை மோர், வெங்காயம்,சிறிதளவு உப்பு, பச்சை மிளகாய் சேர்த்து சாப்பிட்டால் இன்னும் சிறந்த ஆரோக்கியமான, சுவையான உணவாக அமைந்து விடுகிறது.

பழைய சாதத்தில் கல்சியம், சோடியம், பொட்டாசியம், துத்த நாகம், இரும்பு, விற்றமின்- C போன்ற பல்வேறு ஊட்டச் சத்துகள் நிறைந்துள்ளன. மேலும் இதில் அரிதான B6 மற்றும் B12 விற்றமின்களும் காணப்படுகிறன. இந்த வகை விற்றமின்கள் மற்ற உணவுப் பொருட்களில் எளிதில் கிடைப்பதில்லை. பழைய சோறு சாப்பிடுவதால் உடலில் வளர், சிதை மாற்றமும் அதிகரிக்கிறது. குடல் இயக்கங்கள் சீராக இருப்பதால் மலச்சிக்கல், அஜீரணக் கோளாறு போன்ற பிரச்சினைகள் வராமல் தடுக்க முடியும்.

சர்க்கரை நோயாளிகள் கைக்குத்தல் உள்ளிட்ட பொலிஸ் செய்யப்படாத அரிசியில் தயார் செய்யப்படும் பழைய சோறு சாப்பிட்டு வந்தால் இன்சுலின் சுரப்பதை படிப்படியாக அதிகப்படுத்த முடியும்.

பழைய சோறானது சாப்பிடும் போது உடலின் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கின்றது. அத்துடன் காலையில் மட்டும் தான் பழைய சோறு சாப்பிட வேண்டும். நோய்கள் வராமல் தடுப்பதற்கும், வந்த பிறகு குணப்படுத்துவதற்கும் பழைய சாதம் மருந்துகளை விட சிறந்த மருந்தாக இருக்கிறது. அசைவ உணவுகளில் மட்டும் அதிகம் காணப்படும் உயிர்ச்சத்து B12, புரதச்சத்து ஆகியவை பழைய சாதத்தில் உள்ளன. குடல் சார்ந்து ஏற்படக்கூடிய நோய்களுக்கு பழைய சோறு சிறந்த மருந்தாக இருக்கின்றது.

பழைய சோற்றில் காணப்படும் அன்டி ஆக்ஸிடன்ட்ஸ் மற்றும் ஆன்டி இன்ஃப்ள மேட்டரி பொருட்கள் உடலைத் தாக்கும் பக்றீரியாக்களை அழிப்பதற்காகவும் நோய் பரவாமல் தடுப்பதற்காகவும் பயன்படுகின்றன. காலையில் பழைய சோறு சாப்பிடுவதால் குடல் குளிர்ச்சியடைகிறது.

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 776





8 ஆம் அத்தியாயம்
இருட்டில் இரு கரங்கள்

கடம்பூர் அரண்மனை இரகசிய வழிகளின் வாசல்கள் எவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணி வந்தியத்தேவன் வியந்தான். அரை குறையாக அவற்றைக் குறித்து அறிந்தவன் அவசரமாக இறங்கவோ ஏறவோ முயற்சித்தால் அபாயம் நேரலாம். பாதிப் படிகளில் இறங்கும்போது முதலை நகர்ந்து விட்டால் சுவர் இடுக்கில் அகப்பட்டுக் கொண்டு திண்டாட வேண்டியதாகும்.

முதலை அசையாமல் நிற்கிறதா என்று நிதானித்துப் பார்த்துவிட்டு வந்தியத்தேவன் துவாரத்தண்டை வந்து கீழே கால் வைக்கப் போனான். ஆ! அது என்ன? பிலவழியில் காலடி சத்தம் கேட்கிறதே! வருகிறது யார்? ஒருவேளை ஆழ்வார்க்கடியானாயிருக்குமோ? தன்னைத் தேடி வருகிறானோ? அவன் இங்கு வந்து சேராமல் தடுத்து விடுவதே நல்லது. இல்லை இல்லை வருகிறவன் ஒருவன் இல்லை.

ஐந்தாறு பேர் வருவது போல காலடிச் சத்தம் கேட்கிறது. அப்படியானால் இடும்பன்காரியும் அவனுடைய கூட்டாளிகளுமாயிருக்கலாம். வந்தியத்தேவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று மறுபடியும் வாலில்லாக் குரங்கின் பின்னால் மறைந்து கொண்டான். ஆகா! இரகசிய வழியைத் திறந்து வைத்து விட்டு வந்து விட்டோமே? அதனால் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமா? இல்லை, இல்லை! நாம் வரும்போது அந்த வழி திறந்துதானிருந்தது. நாம் மேற்படியில் ஏறிய பிறகு தான் வழி மூடிக்கொண்டது! ஆகையால் திறந்திருப்பதே நல்லதாய்ப் போயிற்று. அதோ துவாரத்தின் வழியாகத் தலை ஒன்று தெரிகிறது. இடும்பன்காரியின் தலைதான்! இதோ மேற்படியில் ஒரு காலை வைத்து நின்று சுற்று முற்றும் அவன் பார்க்கிறான். ஒரு கால் மட்டும் கீழே இருக்கிறது. துவாரம் தானாக மூடிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு அப்படி அவன் ஒரு காலைக் கீழ்ப் படியில் வைத்துக் கொண்டிருக்கிறான் போலும்!

அடேடே! இந்தப் பக்கத்தில் என்ன வெளிச்சம்! சுவரில் யானை முகம் இருந்த இடத்தை விட்டுப் பெயர்கிறதே! அந்தப்புர வழி புலப்படுகிறதே! அந்த வாசல் வழியாக வருகிறது யார்? அதோ மணிமேகலையல்லவா. கையில் விளக்கு ஏந்திக் கொண்டு வருகிறாள்!

இடும்பன்காரி ஒரே பாய்ச்சலில் மேலேறி வருகிறான் அவன் வந்த வழி மூடிக் கொள்கிறது. இடும்பன்காரி தன் தலைப்பாகைத் துணியை எடுத்துக் கொண்டு அருகிலேயிருந்த புலியின் மேலுள்ள தூசை அவசரமாகத் தட்டத் தொடங்குகிறான்! இந்நாடகத்தின் முடிவுதான் என்ன?

மணிமேகலை கை விளக்கைத் தூக்கிப் பிடித்து நாலு புறமும் பார்த்தாள். இடும்பன்காரியின் மீது அவள் பார்வை விழுந்ததும் அவனை அதிசயத்துடன் நோக்கினாள். இடும்பன்காரி தூசி தட்டுவதை நிறுத்திவிட்டுப் பதிலுக்கு மணிமேகலையை வியப்புடன் பார்த்தான்.

"தாயே! இது என்ன? இந்த வேளையில் இங்கு எதற்காக வந்தது?" என்றான். "இடும்பா நீதானா? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று மணிமேகலை வினவினாள். "அம்மா! நாளை வருகிற விருந்தாளிகளை இந்த வேட்டை மண்டபத்துக்கு அழைத்து வந்து காட்ட வேண்டியிருக்குமல்லவா? (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நாவல் மரம் போதித்த பாடம்



பாலன் பள்ளிக்குச் செல்லாமல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவள் தாய் மீனாட்சி பாலனிடம் வந்து, என்னடா நேரம் ஒன்பது ஆகிவிட்டது இன்னும் ஸ்கூலுக்குப் போகவில்லையா?" என்று கேட்டார்.

இல்லை அம்மா. எனக்கு தலைவலிக்கிறது என்றான் பாலன்.

தலை வலிக்குதா, சரி, வா ஆஸ்பத்திரிக் குப் போகலாம் என்று அவன் தலையைக் கோதியபடி பரிவுடன் கூறினாள் மீனாட்சி. வேண்டாம் அம்மா சரியாகி விடும்" என்றான், பாலன்.

அவன் மனதில் பெரும் கவலை குடியிருந்தது. காரணம் இதுதான். அவன் பள்ளி செல்லும் வழியில் ஒரு நாவல் மரம் உள்ளது. அதிக நாட்களாக இந்த மரத்தில் உள்ள பழத்தை ருசி பார்த்து விட வேண்டும் என்று அவனுக்கு ஆசை. அதனால் பள்ளி செல்லும்போதெல்லாம் மரத்தைப் பார்த்துக் கொண்டே செல்வான். அவனது ஆசை நிறைவேறும் நாள் வந்தது. அதனால் அன்று பள்ளிக்குச் செல்லாமல் யாருக்கும் தெரியாமல் நாவல் பழங்களை ருசி பார்த்து விட வேண்டும் என்று நினைத்தான். அதனால் பள்ளிக்குச் செல்வதற்காகக் கொண்டு வந்த பையை மரத்தின் ஒரு ஓரமாக வைத்து விட்டு, பழங்களைப் பறிக்க மரத்தில் விறுவிறு வென ஏறினான். அப்போது அந்த வழியாக வந்த தமிழ் ஆசிரியர் மாதவன் அவனைப் பார்த்து விட்டார். "ஐயையோ, வசமாக மாட்டிக் கொண்டோமே" என்று பயந்தபடி மரத்தில் பதுங்கியிருந்தான் பாலன். உடனே அவனைக் கீழே இறங்கச் சொன்ன ஆசிரியர் "நாளைக்கு வரும் போது உன் அப்பாவை அழைத்துக் கொண்டு வா" என்று சொல்லி விட்டு சென்றார்.

பாலனுக்கு இதைக் கேட்டதும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வியர்த்தது. "அப்பாவை எப்படி அழைத்துச் செல்வது? அவருக்குத் தெரிந்தால் சாட்டை அடி அல்லவா விழும்?" என்று பயந்து கொண்டே இருந்தான். இன்று வெள்ளிக்கிழமை வகுப்பிற்கு லீவு எடுத்ததால், அடுத்த இருநாட்களும் விடுமுறைதான். அதனால், அப்பாவிடம் எப்படியாவது சொல்லி, திங்கட்கிழமை பள்ளிக்கு அழைத்துச் செல்ல வேண்டியதுதான் என்று முடிவு செய்தான்.

அடுத்த இருநாட்கள் அப்பாவின் முகத்தைக் கூட பார்க்க முடியாமல் பயந்தான். அப்பாவிடம் விடயத்தை எப்படி சொல்வது என்று பயந்து கொண்டு சாப்பிடாமல் தூக்கம் வராமல் அவதிப்பட்டான்.

திங்கட்கிழமை பொழுது விடிந்தது. அப்பாவிடம் அதுவரையிலும் சொல்லவில்லை. வேறு வழியின்றி பள்ளிக்கு கிளம்பினான். பயத்துடன் தமிழ் ஆசிரியரைச் சென்று சந்தித்தான். அவர் இந்த இரு நாட்களிலும் பாலனிடம் ஏற்பட்ட வித்தியாசத்தைக் கண்டு கொண்டார். பாலன் அவரிடம் சென்று தன் தவறை உணர்ந்து, அழுது மன்னிப்பு கேட்டான். ஆசிரியர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

தம்பி நான் நினைத்திருந்தால் உன்னைப் பற்றி உன் பெற்றோரிடம் சொல்லியிருக்க முடியும். பெற்றோர் உன்னை அடித்திருப்பார்கள். அதனால் உனக்கு என் மீதும் உன் பெற்றோர் மீதும் கோபம் ஏற்படும். அதனால் எந்தப் பலனும் இல்லை.

நீ உன் தவறை உணர வேண்டும் என்பதால் தான் இவ்வாறு செய்தேன். இந்த இரண்டு நாட்களிலும் ஏற்பட்ட அனுபவத்தை வாழ்நாள் முழுவதும் நீ மறக்கக்கூடாது. இந்த அனுபவம் உனக்கு நல்ல பாடத்தைத் தந்திருக்கும். இனியாவது ஒழுங்காகப் பள்ளிக்கு வந்து படி" என்று அறிவுரை கூறினார்.

இப்போது பாலன் தெளிந்த முகத்துடனும் மனதுடனும் வகுப்பறைக்குச் சென்றான்.

கதை உணர்த்தும் நீதி: ஒருவரை அதிகாரத்தால் அடக்குவதை விட, அன்பால் அடக்குவதே சிறந்தது.

கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு
வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
- அறிஞர் அண்ணா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழர்கள் பலம் பெற்றால் மட்டுமே...

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்கிறது நம் தமிழ்மொழி.

நம் தமிழ் கூறுகின்ற தத்துவங்கள் உயர் வானவை மட்டுமல்ல. யதார்த்தமானவையும் கூட. அவை எக்காலத்திலும் பொருந்தக்கூடியவை.

அந்தவகையில் வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்ற பழமொழியானது வல்லவனை எதிர்கொள்ள வல்லவன் தேவை என்ற கருத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆம், பாகிஸ்தான் தீவிரவாதிகள் காஷ்மீரில் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு இந்தியாவின் பதில் மௌனமாக இருந்திருக்குமாயின், அடுத்தடுத்து பாகிஸ்தான் தீவிரவாதிகளின் தாக்குதல் இந்தியாவை நிலைகுலையச் செய்திருக்கும்.

இங்குதான் இந்தியா மிகப்பெறுமதியான முடிவை எடுக்கிறது. அதாவது பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளின் முகாம்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவது என்பதுதான் இந்தியா எடுத்த அந்தத் தீர்மானமாகும்.

இந்திய குண்டு வீச்சு விமானங்கள் தீவிரவாதிகளின் முகாம்களை இலக்கு வைத்து தாக்குகிறது.

அர்ச்சுனன் கிளியின் கழுத்தை இலக்கு வைத்ததுபோல, இந்தியாவின் இலக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் தங்கியிருந்த முகாம்களைத் தகர்க்க, தீவிரவாதிகள் கலக்கமடைந்தனர். பாகிஸ்தான் அதிர்ந்தது.

இந்தியா தொடர்ந்து தாக்குதலை நடத்தினால், பாகிஸ்தான் மக்கள் தம் நாட்டு அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவர். மக்களின் அந்தப் போராட்டம் யுத்தத்தை நடத்து என்பதற்காகவன்று. மாறாக, யுத்தத்தை நிறுத்து என்பதே அந்த மக்களின் கோசமாக இருந்திருக்கும்.

ஆக, நிலைமை பாகிஸ்தானுக்கு அவ்வளவு நல்லதாக இல்லை என்னும்போது யுத்த நிறுத்தம் சாத்தியமாயிற்று.

இங்கு தான் தமிழர்களாகிய நாம் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, ஈழத் தமிழ் மக்கள் இலங்கையில் உரிமையோடும் சுதந்திரமாகவும் வாழ வேண்டுமாயின், அதற்கான ஒரே வழி நம் புலம்பெயர் தமிழ் உறவுகள் வெளிநாடுகளில் பலம்பெறுவதாகும்.

இங்கு பலம் பெறுதல் என்பது அரசியல், பொருளாதாரம், கல்வி, சமூகம் ஆகியவற்றில் பலம்பெறுவதைக் குறிப்பதாகும்.

அதாவது ஈழத்தமிழ் மக்களுக்கு இலங்கையில் இட்டல் இடைஞ்சல் என்றால், அதனைப் புலம்பெயர் தமிழ் உறவுகள் சகிக்க மாட்டார்கள்.

அவர்கள் சகிக்க மாட்டார்கள் என்றால், அது இலங்கைக்கு ஆபத்து என்பதாக புலம்பெயர் தமிழ் மக்களின் பலம் இருக்க வேண்டும்.

இங்கு பலம் என்பது மற்றவர்கள் அஞ்சும் வகையில் இருக்கும்போதுதான்; எம் இனத்துக்கு விடிவும் உய்வும் சாத்தியமாகும். இதைவிட வேறு வழி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

# எம்மை நாமே ஆள வேண்டும் அதுவே நாம் செய்யும் அஞ்சலி

## நினைவேந்தலில் சிவாஜிலிங்கம் உருக்கம்

(வவுனியா)

தமிழர்கள் தம்மைத் தாமே ஆழக்கூடிய தீர்வினை எடுப்பதுதான் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும் மாவீரர்களுக்கும் நாம் செய்யும் அஞ்சலி. இந்த விடயத்தை நாம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கைத் தீவிற்கு சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லக்கூடிய 1948 ஆம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கள் மீதான தமிழினப் படுகொலை ஆரம்பமாகி விட்டது. 1970களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களும் 1983 இல் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்களையும் படுகொலை செய்தது மட்டுமல்ல, உயிருடனும் பலர் எரிக்கப்பட்டார்கள். பல கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

எம்தாய்மார்கள், சகோதரிகள் நூற்றுக்கணக்கில் மானபங்கப்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு செய்ததன் பின்னரே ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் பல்லாயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் ஆயுதப்போராட்டத்தில் இணைந்து அது தீவிரப்படுத்தப்பட்டு இறுதியாக முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்திலே ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இது ஒரு சர்வதேச போர்க்குற்றம். தமிழினப் படுகொலைக்குற்றம், குற்றவாளிகள் சர்வதேச குற்ற நீதிமன்றத்திலே நிறுத்தப்பட வேண்டும். அது மாத்திரமல்ல, அரசியல் தீர்வாக எங்களுடைய புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களும் வாக்களிக்க கூடிய வகையில் வாக்கெடுப்பு ஒன்றைச் சர்வதேச சமூகம் நடாத்த வேண்டும். அப்பொழுதுதான் எங்களுடைய மக்களுக்கு என்ன தேவை என்பதை மக்கள் தீர்மானிக்க முடியும். சுதந்திர தமிழீழமா? அல்லது நீ போடும் பிச்சையா? என்பதை மக்கள் தீர்மானித்தால், அதை நாம் தலைவணங்கி ஏற்றுக்கொள்கின்றோம்.

அந்தவகையில், இந்தத்தமிழினப்படுகொலை நினைவுநாளை ஒவ்வொரு தமிழனும் உலகெங்கும் அனுஷ்டிக்க் வேண்டும். முள்ளிவாய்க்காலில் மட்டுமல்ல வேறு இடங்களிலும் அனுஷ்டிக்க வேண்டும் என்றார். (ந-4,7,299)

# இப்போது கூட புலிப்பயங்கரவாதத்தின் இருண்ட நிழல்கள் நீடிக்கின்றன

## இனப்படுகொலைச் சின்னம் தொடர்பில் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசால் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்ற ஆதாரமற்ற பாரதூரமான குற்றச்சாட்டை பிரம்டன் மேயர் முன்வைத்தார். யுத்தம் நடைபெற்ற வேளை முப்படைத் தளபதியாக விளங்கியவன் என்ற அடிப்படையில் அதனை நான் முற்றாக மறுக்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், கனடாவின் பிரம்டனில் ஈழ வரைபடத்தை சித்தரிக்கும் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் இப்போதும் கூட பயங்கரவாதத்தின் இருண்ட நிழல்கள் நீடிக்கின்றன என்பதை நினைவுபடுத்துகின்றது.

எங்கள் தாய்நாடு பிரிவினைவாத பயங்கரவாத ஆக்கிரமிப்பிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளமை உங்களுக்குத் தெரியும். இன்று முதல்நாட்டின் ஒவ்வொரு அடிநிலமும் இலங்கையின் இறைமையுள்ள பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களின் அடிப்படையிலேயே ஆளப்படும்.

பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வை ஆரம்பித்து வைத்து 2009 மே 19ம் திகதி நான் வெளியிட்ட இந்த பிரகடனத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. சிங்கக் கொடியின் கீழ் ஒன்றுபட்ட மற்றும் பெருமைமிக்க தேசத்தின் ஜனாதிபதியாகவும் முப்படைத்தளபதியாகவும் நான் இந்தப் பிரகடனத்தை வெளியிட்டேன்.

உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாதக் குழுக்களில் ஒன்றை முற்றிலுமாக அழித்து, ஒவ்வொரு குடிமகனும் இந்த நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் சமஉரிமைகளுடனும் வாழக்கூடிய ஒரு தேசம்என்பது நம்அனைவராலும் நீண்டகாலமாக காணப்பட்ட ஒரு கனவாகும். ஒரு மக்கள் தலைவராக அது எனது தனிப்பட்ட கனவாகவும் காணப்பட்டது.

2005ம் ஆண்டு நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றவேளை, விடுதலைப்புலி பயங்கரவாதிகள் தனிநாட்டிற்கான தயாரிப்பில் வடக்குகிழக்கில் ஏற்கனவே நிர்வாக மையங்களை ஏற்படுத்தியிருந்தனர். அவர்கள் எமது தாய்நாட்டின் மூன்றிலொரு பகுதியையும் கடற்கரையின் ஒரு பகுதியையும் ஏற்கனவே தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

வடக்கிலுள்ள எங்களின் சொந்தத் தமிழ் பேசும் மக்களை அவர்கள் பயமுறுத்தி பிணைக்கைதிகளாக மிரட்டி பிடித்து அநியாயமாக வரிவிதித்து இளைஞர்களை, பெண்களை பாடசாலை மாணவர்களை தங்கள்அணிகளில்வலுக்கட்டாயமாகச் சேர்த்துக் கொண்டனர்.

அவர்களின் தாக்குதல்கள் நாடு முழுவதும் உள்ள பொருளாதார மையங்கள், மத ஸ்தலங்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்களைக் குறி வைத்தன.

இறுதியில் மக்களின் தாகத்தை தணித்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிற்கு நீர் வழங்கும்நீர்ப்பாசன நீரைக் கூட அவர்கள் தடுத்துவைத்திருந்தனர். இது அவர்களின் தீவிரவாதத்தின் கொடூரமான அளவை காட்டுகின்றது.அவர்கள் தாங்கள் பிறந்த மண்ணில் அப்பாவி மக்களின் குருதிகளை சிந்தி இலங்கைக்கான புதிய வரைபடத்தை உருவாக்கத் திட்டமிட்டிருந்தனர்.

உலகின் வல்லரசுகள் கூட பயங்கரவாதம் குறித்த அச்சத்தில் சிக்குண்டு இருந்தவேளை, நான் விடுதலைப்புலிகளை எதிர்கொள்ள திட்டமிட்டேன். இது மனிதாபிமான நடவடிக்கை.

எனினும்கனடாவின் பிரம்டனில் அமைந்த தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் இப்போதும் கூட பயங்கரவாதத்தின் இருண்ட நிழல்கள் நீடிக்கின்றது என்பதை நினைவுபடுத்துகின்றது எனத் தெரிவித்துள்ளார். (ந-[illegible])

## மதுபோதையில் சாரத்தியம்

# பொலிஸ் அதிகாரி பணியிடை நீக்கம்

மதுபோதையில் வாகனம் ஓட்டிய மட்டக்களப்புப் பிரதேசத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியொருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரியொருவரே இவ்வாறு சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வாகனம் ஓட்டிய நிலையில் கடந்த 16ஆம் திகதி அம்பாறை காவன் திஸ்ஸ வித்தியாலயத்தின் அருகே குறித்த பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவரது சேவையை இடைநிறுத்த, மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே [illegible] வரும் 23ம் திகதி குறித்த பொலிஸ் அதிகாரியை அம்பாறை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4,7)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

70/100



**விருச்சிக இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 11.5.2025 அன்று அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். எனவே துணிவும், தன்னம்பிக்கையும் தேவை. தொட்ட காரியங்களில் வெற்றிபெற குரு வழிபாடு கைகொடுக்கும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர்

## எட்டாம் இடம் வரும் குரு! இனிதே வழிபட யோகம் வரும்

குரு. அவர் அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் அவரது பார்வை 2ஆம் இடமான தன் வீட்டையே பார்க்கிறது. தன ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் தன வரவு தாராளமாக வந்து கொண்டே இருக்கும். செல்வாக்கு மிக்கவர்களின் பழக்கத்தால் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். கல்வியில் தேர்ச்சி பெற்று, கடல்தாண்டி பணிபுரியும் வாய்ப்பு உண்டு. அஷ்டம குருவின் ஆதிக்கத்தால் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட தொல்லை அகலும், நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாக, அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெற அனுகூலம் தரும் குரு தலங்களைத் தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**குருவின் பார்வை பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, [illegible] ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. குறிப்பாக [illegible]ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவது மிகுந்த யோகம் தரும். தொட்டது துலங்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். வெற்றிக்குரிய தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் சரளமாக இருக்கும். பணிபுரியும் இடத்தில் நீங்கள் கேட்ட சலுகைகளை உயரதிகாரிகள் வழங்குவர். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு.

செய்தொழிலில் உங்கள் திறமை பளிச்சிடும். கணவன் ஓரிடத்திலும், மனைவி ஓரிடத்திலுமாகப் பணிபுரிந்தவர்கள் இனி ஒரே இடத்தில் பணிபுரியும் வாய்ப்பைப் பெறுவர். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். குருவின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால் ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் திருமண முயற்சிகள் கைகூடும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் எதிர் பார்த்ததைக் காட்டிலும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

கூடுதல் இலாபம் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் பணி புரிவீர்கள். செய்தொழிலில் வெற்றி கிடைக் கும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற நல்ல வாய்ப்புகள் வந்து சேரும், செல்வாக்கு அதிகரிக்கும், நண்பர்களின் ஆதரவோடு பொதுவாழ்வில் பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்கு செவிசாய்ப்பர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் சீராகவும், சிறப்பாகவும் இருக்கும் நேரமிது.

10.6.2025 முதல் 7.8.2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் கவனத்தோடு செயற்பட வேண்டும். பெற்றோரின் அனுசரிப்பு குறையலாம். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. இல்லற வாழ்வில் இனிமை சேர, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும், பணிபுரியும் இடத்தில் நிதானம் தேவை. இக்காலத்தில் சர்ப்ப தெய்வ வழிபாடு நன்மையை




வழங்கும்.

8.8.2025 முதல் 25.5.2026 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான பலன் களும், அதிஷ்ட வாய்ப்புக்களும் உங்களுக்கு வந்து சேரும். தொழில் வெற்றிநடை போடும். மேலதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு ஆச்சரியப் படுவர். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும் புகழ் பெற்ற ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருவீர்கள். முன்னோர் கட்டிவைத்த ஆலயத் திருப்பணி யைத் தொடரும் வாய்ப்பு உண்டு.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குரு பகவான் கடக இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 1, 3, 5 ஆகிய இடங்களை பார்க்கப் போகின்றார். குருபகவான் உங்கள் இராசியைப் பார்க்கும் இந்த நேரம் மிகுந்த யோகமான நேரம் ஆகும். புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். செல்வ வளம் பெருகும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும் வருமானம் உயரும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம்.

நீங்கள் தேர்ந்தெடுத்த களம் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றி கிடைக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பூர்வீகச் சொத்துக்களில் வீடு கட்டும் யோகம் உண்டு. நண்பர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பார்த்த படி வந்து சேரும் படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு கருதியோ அல்லது மேற் படிப்பு கருதியோ நீங்கள் எடுத்த முயற்சிகள் கைகூடும். அயல்நாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். பூர்வ புண்ணிய ஸ்தானத்தைக் குருபகவான் பார்ப்பதால் அனைத்து யோகங்களும் இந்த நேரத்தில் வந்து சேரும்.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனிபகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனி விலகுகின்றது. எனவே மனக் குழப்பம் அகலும், மகிழ்ச்சிகூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உடல்நலம் சீராகும். உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர், கொடுக்கல்-வாங்கல்கள் சரளமாக இருக்கும். திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். இக்காலத்தில் சனிகவசம் பாடி சனிபகவானை வழிபடுவதோடு, சனிக்குரிய சிறப்பு தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக உங்களுக்கு எண்ணற்ற நற்பலன்கள் இல்லம் தேடி வரப்போகின்றது. பொருளாதார நிலை உயரும். புகழ்மிக்கவர்களின் சந்திப்பால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். உங்கள் பெயரிலேயே அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் திருமணக் கனவுகளை நனவாக்குவீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் நீங்கள் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

(தொடரும்)

## நினைவேந்த...

வெள்ளவத்தையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை நினைவேந்தலை இடைநிறுத்துமாறு ஒரு தரப்பினர் பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டமையால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமிழ் மக்களை நேற்று தமிழர் தாயகமும் தமிழர் புலம்பெயர் தேசங்களும் கண்ணீர் மல்க நினைவுகூர்ந்த நிலையில், வெள்ளவத்தையிலும் நினைவேந்தல் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நினைவேந்தல் சுமூகமாக இடம்பெற்ற நிலையில், திடீரென அப்பகுதிக்குள் பிரவேசித்த சிலர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிரான கோசங்களை இட்டதோடு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸாருடனும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது.

இருப்பினும் சிறுதி நேரத்தின் பின்னர் நிலைமை சுமுகமானதுடன் நினைவேந்தலும் எவ்விதத் தடங்கலும் இன்றி நிறைவு பெற்றது. (ந-7,4)

## யுத்த வெற்றி...

பார் என்று இராணுவ வீரர்கள் சேவை அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் என்று அதன் தலைவர் ஓய்வுபெற்ற பிரிகேடியர் செனரத் கோஹோன தெரிவித்தார்.

யுத்த வெற்றியின் 16வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் "தேசிய வெற்றி கொண்டாட்டம்" இன்று ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் உள்ள இராணு வீரர்கள் நினைவுச்சின்னத்திற்கு முன்பாக மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7,4)

## செந்நீரில்...

நேற்றுக் காலை 10.15 மணிக்கு தவத்திரு அகத்தியர் அடிகளாரால் கொள்கைப் பிரகடன வாசிப்புடன் ஆரம்பமாகிய நினைவேந்தலில் காலை 10.29க்கு நினைவொலி எழுப்பப்பட்டு 10.30க்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இறுதி யுத்தத்தில் தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்த முள்ளிவாய்க்கால் மேற்கைச் சேர்ந்த வீரசிங்கம் இராசேந்திராவால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. சமநேரத்திலே ஒற்றைச் சுடரொளி ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட் டது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு; படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வின்போது, உயிர்நீத்தவர்களின் உறவுகள் கதறியழ, கண்ணீரில் முள்ளிவாய்க்கால் முற்றம் மூழ்கியது. (ந-7,4)

## முள்ளிவாய்க்...

சிறந்த நாள் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துகொண்ட சிங்கள இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் நேற்று இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றதன் பின்னர், பேஸ்புக் காணொளி ஊடாக பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "நாங்கள் இன்று முள்ளிவாய்க்கால் மண்ணில் இருக்கின்றோம். இது ஒரு புண்ணிய பூமிபோன்று தெரிகிறது. உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து அவர்களது உறவினர்கள் சுடர் ஏற்றி வழிபடுகின்றனர்.

ஆனால் கடந்த 16 வருடங்களுக்கு முன்னர் இந்தப் புண்ணிய பூமியில், இடம்பெற்ற இறுதிப் போரின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் தகவலுக்கமைய 70,000 பேர் வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

உத்தியோகபூர்வத் தகவல்களுக்கமைய 150,000 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் வெறும் அப்பாவிக் குடிமக்களே கொல்லப்பட்டனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

உயிரிழந்தவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. அவர்களின் உறவுகள் இங்கு வருகை தந்து அவர்களை நினைவுகூருகின்றனர்.

இந்நிலையில் தெற்கில் உள்ளோர் வடக்கிற்குச் செல்ல மே 18ஆம் திகதியே சிறந்த நாள் என்று" அவர் மேலும் கூறியுள்ளார். (ந-7,4)

## தமிழ் இனப்...

இலங்கை அரசுக்குப் பதிலடி கொடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு கனேடியப் பிரதமர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாக கனடாவின் பிரம்டன் நகரில் திறக்கப்பட்ட தமிழினப் படுகொலை நினைவுத் தூபியானது முழுமையாக தேர்தல் அரசியலை மையப்படுத்தியது. இலங்கையில் இனப்படுகொலை என ஒன்று இடம்பெறவில்லை என்றவாறு இலங்கை அரசு விமர்சித்திருந்ததுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கனேடிய உயர்ஸ்தானிகரை நேரில் அழைத்தும் தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் வெளிவந்துள்ள கனேடியப் பிரதமரின் அறிக்கையானது, இலங்கைக்கு தக்க பதிலடி கொடுக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஆயுதப் போர் முடிவடைந்து இன்றுடன் (நேற்று) 16 வருடங்கள் ஆகிவிட்டன. 26 வருடங்களுக்கும் அதிகமாக நீடித்த இந்தப் போரில் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளில், இழந்த உயிர்களையும் சிதறிப் போன குடும்பங்களையும் பேரழிவடைந்த சமூகங்களையும் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரையும் நாம் நினைவு கூருகின்றோம்.

அத்துடன் தமது அன்புக்குரியவர்களின் நினைவுகளைச் சுமக்கும் கனேடிய தமிழ்ச் சமூகத்தையும் கனடாவின் பல பகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வுகளையும் நாம் மனதிற் கொள்கின்றோம்.

பொறுப்புக்கூறலுக்கும் உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கின்றது.

இந்த நினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும் போது, துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டையும், நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத்தட்டும் என்று குறிப்பிட்டுள்ளது. (ந-7,4)

## கடைகள்...

விசுவமடுவில் முழுமையாகக் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் வீதி நெடுகிலும் கூடாரங்கள் அமைக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ந-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 5833
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 1 1 8 1 4 9
அத சம்பத L 8 1 4 9
சீட்டிழுப்பு இலக்கம் 408
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி -2025.05.18
சீட்டிழுப்பு இலக்கம் -1863
L 02 23 47 62 L
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 66124

மெகா பவர்
திகதி 18/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2181
E 20 47 60 67 71

ஜய
திகதி 2025.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 101
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 4 1 6 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4075
சீட்டிழுப்பு திகதி 18.05.2025
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Q 01 30 39 73
Q
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 1142
வெற்றி இலக்கங்கள்
கடகம் 04 23 30 41 கடகம்
24222 04

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
18.05.2025 வெற்றி வாரம் 541
ஆங்கில எழுத்து E மற்றும் வெற்றி இலக்கம் 8 8 5 4 4 6
64703
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,436,846.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2807
சீட்டிழுப்பு திகதி 2025.05.18 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 24 30 54 56 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,532,792.00
DLB

சனிதா
திகதி 18.05.2025 வெற்றி வாரம் 4968
வெற்றி இலக்கங்கள் 12 14 57 64 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,025,665.60
ரூ. 100,000/- 87686
DLB

சசிரி
வெற்றி வாரம் 685
சீட்டிழுப்பு திகதி 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 19 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4519
சீட்டிழுப்பு திகதி 18.05.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 45 46 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,441,761.60
252705
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 11 18 22 43 57
சீட்டிழுப்பு வாரம் 1988
18.05.2025 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.575,215,605.40
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2633
சீட்டிழுப்பு திகதி :2025.05.18
வெற்றி இலக்கங்கள் 07 12 34 59 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,253,322.40
ரூ.100,000/- 473828
DLB

## தேசமெங்கும்...

உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற நிலையில், அதற்குச் சமாந்தரமாக தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகளும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி, வலி சுமந்து வந்த பாதையை அடுத்த தலைமுறைக்கு நினைவூட்டும் செயற்திட்டங்களும் இடம்பெற்றன.

அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வானது நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நினைவேந்தலின் போது ஈகைச் சுடர் ஏற்றி மலர் தூவி இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதேபோன்று தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையினால் இரணைமடுச் சந்தியில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது, மதத் தலைவர்களுடன் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் தலைவர் பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள பொன்.சிவகுமாரனின் திருவுருவச் சிலைக்கு அருகாமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினராலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் இணைந்து இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்கினர்.

மட்டக்களப்பு வாகரை முகத்துவாரம் கடற்கரையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால், நினைவேந்தல் தீபச்சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



இந் நினைவேந்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி அனுஷ்டித்தனர்.



தமிழின்ப்படுகொலையின் 16 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம் பெற்றது.



தமிழினப் படுகொலை மன்னாரிலும் நினைவு கூரப்பட்டதுடன் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இதேவேளை இங்கிலாந்தின் சவுத் என்டில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் 16வருடத்தினை நினைவுகூர்ந்துள்ளனர்.

17 ம்திகதி மாலை கடற்கரையோரம் கூடிய மக்கள் 16 வருடங்களிற்கு முன்னர் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் அழிக்கப்பட்ட தங்கள் உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

சிங்களப் பேரினவாத அரசினால் மேற்கொள்ளப்பட்டும், தொடர்ந்து நடைபெற்று வரும் தமிழின அழிப்பின் பேரவலங்களை ஒளித்திரையில் காட்சிப்படுத்தும் வீடியோவுடன், ஒரு சிறப்பு ஊர்தியானது இன்று(நேற்று) அல்பேர்டன் (Alperton) பகுதியில் இருந்து லண்டனின் பாராளுமன்ற சதுக்கம் (Parliament Square) நோக்கி ஊர்வலமாகச் செல்கிறது.இந்த வாகன ஊர்தி ஆங்கிலம், இந்தி, சயினீஸ் மற்றும் அரபு மொழிகளில் தகவல்களை தாங்கி, உலகின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நகரம் முழுவதும் பயணிக்கிறது. (ந-4,7)











### பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

திருநெல்வேலி கிழக்கு வாலைஅம்மன் சனசமூக நிலையத்தின் 2025ம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 07.06.2025 சனிக்கிழமை அன்று நிலைய மண்டபத்தில் பி.ப 5.00 மணியளவில் நடைபெறும். அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.

(C-3001) - செயலாளர்

### Canada Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும். Visitor visa, Student visa பெற்றுக் கொடுக்கப்படும். (Canada, France, Australia, Japan etc...)

விசா ஆலோசகர் (J.P)

077 413 4528

யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, வவுனியா (1146)

### விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கான 1Kg க்கான கட்டணம்

UK - 1380/= Australia - 2130/=
France - 1930/= Germany - 1880/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் பொதிகள் சேவை
321,K.K.S Road, Jaffna
077 755 4528 (1147)

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி

### காணி விற்பனைக்கு

சுன்னாகத்தில் இருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் பிரதான வீதியோரமாக 28 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ஹோட்டல்கள், Food city, கடைகள் கட்டுவதற்கு உகந்தது.

076 742 4301
075 710 9639 (4322)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3002) 076 825 7716 (ஆகாஸ்)

### அறைகள் வாடகைக்கு

யாழ். கந்தர்மடம் மணற்தரை ஒழுங்கையில் அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

076 543 1835
077 038 5584
075 258 0710 (1146)

### A/L வரலாறு

M.பத்மன் B.A(Hons) History, M.A History M.E.D

பாராட்டி வாழ்த்துகிறேன்



செல்வி. பாலகுமார் கௌசிகா
A/L - 2024
மாவட்ட நிலை - 02

Best Wishes

மாவட்டத்தில் இரண்டாம் நிலை பெற்று வரலாறு பாடம் எடுத்தவர்களில் முதல் நிலை மாணவியாகத் திகழும் இவரை வாழ்த்துவதோடு ஏனைய உயர் பெறுபேறு பெற்று சட்டத்துறைக்கு தெரிவான மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன். (C-2997)

வழமைபோன்று இம்முறையும் எனது மாணவர்களே அதிக A தர சித்திகளைப் பெற்றுள்ளனர்

கற்பிக்கும் இடங்கள்

D.M.I ஆரிய குளம், யாழ்ப்பாணம். | உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி, கொக்குவில். | BITSMANS மானிப்பாய்.

### உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-3003)

### கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3003)

### அர்ச்சகர் தேவை

காரைநகரிலுள்ள பிரபல ஆலயத்திற்கு நித்திய பூஜைக்கு அந்தண அர்ச்சகர்/ குருக்கள் தேவை. தகுந்த ஊதியமும், தங்குமிடமும் வழங்கப்படும்.

தொடர்பு : 077 482 2550 (4320)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.